# குரு சிம்ம இராசியில் நிற்கும் காலத்தில் திருமணம் செய்யலாமா ?

## 14.7.2015 முதல் 11.8.2016 வரை

குரு சிம்ம ராசியில் மன்மத ஸ்ரீ ஆனி மீ முதல் துன்முகி ஸ்ரீ ஆவணி மாதம் வரை சஞ்சரிக்கிறார். இடையிலும் அவர் வக்கிர நிலையில் (9.1.2016 - 9.5.2016) அதே சிம்ம ராசியில்தான் சஞ் சரிக்கிறார். இக்காலத்தில் திருமணம் செய்யக்கூடாது என்று சிலர் கூறுகிறார்கள். இது குறித்து ஸ்ம்ருதி, தர்மசாஸ்திரங்கள் என்ன கூறுகின்றது என்பதை பார்ப்போம்.

नारदः — 'गुरौ तु सिंहराशिस्थे भागे भाग्यवती भवेत् ।
पैत्रेऽर्यमर्क्षे सा नारी विवाहे विधवा भवेदिति ।। एतन्नर्मदोत्तरविषयम् ।।
यदाह व्यासः — 'नर्मदोत्तरदेशे तु सिंहस्थे देवमन्त्रिणि । विवाहं नैव
कुर्वीत निषेधो नास्ति दक्षिणे इति ।। श्रीधरीये — नर्मदोत्तरभागेषु
सिंहस्थेऽमरपूजिते । विवाहादि न कुर्वीत नायं दोषोऽस्ति दक्षिणे ।।
सिंहराशौ सिंहराशौ यावत्तिष्ठति वाक्पतिः । नर्मदायाम्यकोणेन न दोषो
दक्षिणापथ' इति ।।

**நாரதர்:** குரு ஸிம்மராஸியில் உத்தரபல்குனி (உத்திரம்) நக்ஷத்திரத்தில் நிற்கும் காலத்தில் விவாஹம் செய்யப்பட்டவள் மிகவும் பாக்யமுடையவளாவாள். மற்ற மகம், பூரம் உசிதமல்ல. இது நர்மதைக்கு உத்திரத்தில் வசிப்பவர்களுக்காகும்.

**வ்யாஸர்:** குரு ஸிம்மத்திலிருக்கும் பொழுது விவாஹம் கூடாதென்பது நர்மதை நதிக்கு உத்திரத்தில் உள்ள தேசத்திற்கானது. தக்ஷிண தேஸத்திற்கு (தென்னிந்தியா) நிஷேதமில்லை.

**ஸ்ரீதரீயம்:** குரு சிம்மத்தில் இருக்கும் பொழுது நர்மதைக்கு வடக்கே இருக்கும் தேசங்களில் விவாஹாதிகள் கூடாது. இந்த தோஷம் தக்ஷிணதேசங்களில் இல்லை.

**முடிவு:**

**தமிழகம் உட்பட தென்னிந்தியாவில் வசிப்பவர்கள் "சிம்ம குரு" காலத்தில் விவாஹம் செய்வதில் எந்த தடையும், தோஷமும் இல்லை என்பதை மேற்படி சாஸ்திர நூல்களில் மிகதெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதை அறியலாம்.**

**மேலும் "மகாமகம்" நிகழும் சௌரமான கும்ப (மாசி) மாதத்திலும், சாந்திரமான மாக மாஸத்திலும் விவாஹம் நடத்த தடை ஏதும் இல்லை**

*ஆதாரநூல்: ஸ்ம்ருதிமுக்மாபலம், (வர்ணாச்ரம தர்மகாண்ட: பூர்வபாக:), விவாஹ நிஷித்த மாஸே*


## ஸ்ரீதணிகை பஞ்சாங்கம்

**பாலு சரவண சர்மா**

*பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர், ஜோதிடர், பஞ்சாங்க கணிதர்*

எண்: 9, 4வது தெரு, கல்யாண நகர், தாம்பரம் மேற்கு, சென்னை 45

(முடிச்சூர்சாலை, கோன் கிருஷ்ணா மண்டபம் அருகில்)

தொலைபேசி எண்: 98403 69677 (தொடர்பு நேரம் பகல் 1 மணிக்கு மேல்)

| www.prohithar.com | www.thanigaipanchangam.com |